## நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளின் கூற்றின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானம் இனங்காணப்பட வேண்டும். எனினும் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட சேவைகளுக்காக விலைப்பட்டியல்கள் விநியோகிக்க முடியாமையின் காரணமாக அந்த வருமானங்கள், மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருக்காததுடன் அதன் விளைவாக இலாபம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

(i) பின்வரும் வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- வருட ஆரம்பத்தில் மொத்தமாகக் கொண்டுவரப்பட்ட தொகை மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு.

- மீள் பெறுமதியிடப்பட்ட தொகைகளில் குறிப்பிடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான உண்மைப் பெறுமதி மதிப்பிடுகையில் அமுல்படுத்தப்படுகின்ற மீள்மதிப்பு, முறை, சூத்திரங்கள், திகதி

(ii) முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ஆனால் தற்போதும் உபயோகத்தில் காணப்படுகின்ற ரூபா 697,646,458 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

(iii) சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் மீள்கணிப்பீடு ஒட்டுமொத்த வகுப்புகளுக்காகவும் செய்யவேண்டியிருந்த போதிலும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மீளாய்வாண்டின் போது அதே வகுப்புக்குரிய ரூபா 200,100,473 பெறுமதியடைய சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 8,007,337 தொகையான சேவை முற்பண மீதி மீளாய்வாண்டின் போது நடைமுறையற்ற சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்மைக்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,674,250 கிரயமான சில சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன மூலதனமாக்கப்படாமல் இருப்பாகக் காணப்பட்டது. எனினும் இருப்பு மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் முறையே அத்தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(vi) எந்தவித ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரமான ஆவணங்களும் நாட்குறிப்புக்களுடன் இணைக்கப்படாமல் ரூபா 2,778,676 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(vii) 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணம், பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சினால் கையேற்கப்பட்ட குடியிருப்புத் திட்டமிடல், அபிவிருத்தி நிலையத்திற்குரிய (சீஎச்பீடீ) சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரரர்களிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்புப் பணம் அட்டுறு அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 1,546,250 பெறுமதியான பங்களிப்புப் பணம் 2012 ஆம் ஆண்டிற்குரித்தற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அத்தொகை எதிர்கால வருமானமாகக் கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்தது.

### 1.2.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட 5 சட்டரீதியான வழக்குகள் தொடர்பாக எழுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 முதல் 2004 வரையான காலத்தில் தேசிய இயந்திர உபகரண அமைப்பிற்கு (என்ஈஎம்ஓ) மோட்டார் வாகனங்கள், பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கப்பட்ட வகையில் பெறவேண்டிய ரூபா 114,529,393 ஆன வாடகைக் கட்டணம் 2013 யூன் 06 ஆந் திகதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகம், செயற்பாட்டு பயிற்சி நிலையம் (ஓரீசீ) மற்றும் நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையம் (சீஈரீஆர்ஏசீ) என்பவற்றிற்குரிய ரூபா 19,696,070 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் 1992 முதல் தொடர்ச்சியாக பெறவேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்ட போது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 7,229,513 தொகையால் அல்லது 36% ஆன குறைவைக் காட்டியது. ஒரு வருடத்தை விஞ்சிய ரூபா 6,761,278 பெறுமதியான கடன்பட்டோர்கள், கடன்பட்டோர் தீர்த்தல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் இந்த மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 118,042,203 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 116,412,258 தொகை அல்லது 99 சதவீதம் ஐந்து வருடங்களுக்கும் மேலான காலம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த கடன்பட்டோர்களிடமிருந்து உறுப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கடிதம் அனுப்பும்படி நாங்கள் அறிவித்திருந்த போதிலும் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அத்தகைய கடிதம் கடன்பட்டோர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 19,696,070 தொகையான மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 65% ஐ பிரதி நிதித்துவப்படுத்தும் ரூபா 12,785,721 தொகையான கடன்பட்டோருக்காக மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் 13% இனைப் பிரதி நிதித்துவப்படுத்திய ரூபா 1,687,144 தொகைக்காக மாத்திரம் பதில் அளிக்கப்பட்டிருந்தது. அந்த ரூபா 1,687,144 தொகையான கடன்பட்டோரில் 86% ஐ பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 1,445,502 மீதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மொத்தக் கடன்பட்டோரில் 5% ஐ ரூபா 1,280,265 தொகையான வரிசை அமைச்சின் கடன்பட்டோர்கள் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம், அமைச்சு இத்தொகையை செலுத்துவதற்கு இணங்கியிருக்கவில்லை. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் இத்தொகையை வரிசை அமைச்சிலிருந்து நாளதுவரையாக அறவிடுவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியதாக ரூபா 1,128,270 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் இத்தொகையை அறவிடுவதற்கு எம்முயற்சியினையும் செய்திருக்கவில்லை.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பயிற்சிகளில் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் நீடிப்பின் காரணமாக நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தின் (சீஈரீஆர்ஏசீ) கடன்பட்டோர் மீதி ரூபா 3,129,957 ஆக ஏற்பட்டிருந்ததுடன் இந்நிலுவைக் கடன்பட்டோரின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளன.

(ஏ) குடியிருப்புத் திட்டமிடல், கட்டிட நிலையத்தினால் (சீஎச்பீடீ) சில பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தது. ஆனால் ரூபா 184,150 தொகையான பாடநெறிக் கட்டணம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்காததுடன் இப்பணத்தை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம், ரூபா 2,305,021 தொகையான நானாவிதக் கடன்கொடுத்தோர் தீர்க்கப்படாமல் 5 வருடங்களுக்கும் மேலான காலம் நிலுவையாகவுள்ளன.

(ஒ) மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு உதவியான ரூபா 2,663,659 தொகையானது ஐந்தொகையில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும் இப்பணத்தைத் தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் காணப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | **விடயங்கள்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (அ) | பெறுமதி சேர் வரி, பொருட்கள், சேவைகள் வரி மற்றும் முத்திரை வரி | 1,128,270 | விரிவான பட்டோலை |
| (ஆ) | மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு மானியங்கள் | 2,663,659 | |
| (இ) | ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1,786,004,708 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு | 1998 இலிருந்து 2011 வரையான காலப்பகுதிக்குரிய தீர்மானிக்கப்பட்ட ரூபா 2,300,678 தொகையான கணக்காய்வுக் கட்டணம் நிர்மாணப்பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் 2013 ஏப்ரல் 05 வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டம் | நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து பொருளாதார சேவைக்கட்டணம் எதுவும் செலுத்தப்பட்டிராததுடன் அறிக்கைகளும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.7 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்பட்டிராத கொடுக்கல், வாங்கல்கள்

குடியிருப்புத் திட்டமிடல் கட்டிட நிலையத்திற்கு பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காக தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படடிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 30 வரை அந்த நிறுவனத்தின் சேவைக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அதே நிறுவனத்தினால் பாதுகாப்பு சேவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரை ரூபா 85,312 தொகை முறையான அதிகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 77,929,027 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 78,758,145 ஆன பற்றாக்குறையில் விளைந்திருந்தமையால் முன்னைய ஆண்டிற்காகப் பெறப்பட்ட ரூபா 55,200,000 ஆன மீண்டெழும் மானியம் காரணமாகவும் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட ரூபா 47,150,000 ஆன அரசாங்க மீண்டெழும் மானியங்களினால் பற்றாக்குறையில் ரூபா 829,118 உம் ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் பற்றாக்குறை அதிகரித்தமைக்கு வருமான உழைத்தல் செயற்பாடுகளில் அதிகரித்த செலவினங்களைச் செய்ய வேண்டியிருந்தமையே காரணமாகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது 260 பதவியணியினர்கள், ரூபா 727 மில்லியன் பெறுமதியான மொத்த சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மானியமாகக் கிடைத்த ரூபா 87 மில்லியன் தொகையான அரசாங்கப் பங்களிப்பினைப் (மூலதன மற்றும் மீண்டெழும் மானியம்) பயன்படுத்தியதன் பின் விளைவுகள் ரூபா 79 மில்லியன் செயற்பாட்டுப் பற்றாக்குறையாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் பற்றாக்குறையானது மொத்த சொத்துக்களில் 11 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் முன்னைய ஆண்டின் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகின்ற போது 1 சதவீத சாதகமான நிலையை காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அபிவிருத்திப் பிரிவு

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதான நோக்கங்கள் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல், தரப்படுத்துதல் மற்றும் தொடர்புபட்ட தரவுகளைப் பேணுதல், புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், நிர்மாணத் துறைக்கான நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் என்பனவாகும். மேற்கூறப்பட்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான பிரதான பிரிவாக அபிவிருத்திப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் என்போரை உள்ளடக்கி மொத்தமாக 19 பதவியணியினர்களைக் கொண்டுள்ளது. முறையான வருடாந்த அமுலாக்கல் திட்டமொன்று 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட ரூபா 70 மில்லியன் வருமானத்தை ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் ரூபா 75 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது இப்பிரிவின் பதவியணியினருக்கான மொத்தச் செலவினம் ரூபா 10 மில்லியன் ஆகும்.

(ஆ) பயிற்சிப் பிரிவு

(i) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், தேசிய நிர்மாணக் கைத்தொழிலுக்கு அவசியமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நடாத்துதல், பயிற்சித் தேவைகளை இனங்காணுதல் மற்றும் மனித வலுவை மதிப்பிடுவதும் அதன் பிரதான நோக்கமாகும். எனினும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச்

செயற்பாடுகளின் போதியளவான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் (ஏஜபீ) உள்ளடக்கப்பட்ட ஆறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பயிற்சிப் பிரிவில் மேலுமொரு பிரதான நோக்கமாக, நிர்மாணப் பிரிவில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்பவியலாளர்களின் போட்டித்திறன் மற்றும் இயலுமை என்பவற்றை அதிகரித்துக் கொள்வதற்கான தேசிய தொழில்சார் தகைமை சான்றிதழை வழங்குவதற்காக தேசிய தொழில்சார் தகைமை (என்வீகிவ்) மதிப்பீட்டு நிலையம் உருவாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

* 2012 ஆம் ஆண்டிற்காக தேசிய தொழில்சார் தகைமை (என்வீகியூ)/ முன்மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஆர்பீஎல்) என்பவற்றை இனங்காண்பதற்காக நான்கு முன்மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேசிய தொழில்சார் தகைமை (என்வீகியூ)/ முன்மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஆர்பீஎல்) என்பவற்றை இனங்காண்பதற்காக நான்கு முழுமையான மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துவதற்கு பாதிடப்பட்டிருந்த போதிலும் எந்த நிகழ்ச்சித்திட்டமும் 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

* தேசிய தேவையாகக் கருத்தி தேசிய தொழில்சார் தகைமை (என்வீகியூ) தாபனம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கடந்த 3 வருட காலத்தில் 12,575 நபர்களுக்காக தேசிய தொழில்சார் தகைமை (என்வீகியூ) முன்மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அறிவு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 1,423 நபர்கள் மாத்திரம் முழுமையான மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை பூரணப்படுத்தியிருந்தனர். ஆனால் நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்த 1,017 நபர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) குடியிருப்பு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையம் (சீஎச்பீடீ)

(i) குடியிருப்பு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானம் மற்றும் செலவினம் என்பன முறையே ரூபா 17.7 மில்லியன் மற்றும் ரூபா 17.6 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் அடிப்படையில் இலாப உழைப்பு 0.56% ஆன ஆகக் குறைந்த பெறுமதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் (ஏஜபீ) உள்ளடக்கப்பட்ட எட்டு பாடநெறிகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பன மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டின் போது ஐந்து பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வருமான இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட பாடநெறிகளின் இலக்கிடப்பட்ட வருமானங்களில் 62% உழைக்கப்பட்டிருந்ததுடன் குடியிருப்பு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் ரூபா 2,262,500 தொகையை உழைப்பதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் வருமானக் குறைவுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்து அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையம் (சீஈரீஆர்ஏசீ)

(i) 2012 ஆம் ஆண்டின் நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தின் மொத்த வருமானம் மற்றும் செலவினங்கள் முறையே ரூபா 15.5 மில்லியன் மற்றும் ரூபா 46.5 மில்லியனாக இருந்தமையினால் ரூபா 31 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் இலாப விகிதம் மறை 201% ஆக இருந்தது.

(ii) வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏழு செயற்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றில் இலக்கிடப்பட்ட வருமானம் அடையப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்படுத்துனர் பயிற்சி நிலையம் (ஓரீசீ)

(i) 2012 ஆம் ஆண்டின் செயற்படுத்துனர் பயிற்சி நிலையத்தின் மொத்த வருமானம் மற்றும் செலவினங்கள் முறையே ரூபா 28.8 மில்லியன் மற்றும் ரூபா 62.8 மில்லியனாக இருந்தமையினால் ரூபா 34 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் இலாப விகிதம் மறை 118% ஆக இருந்தது.

(ii) வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது 13 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக புதிய 4 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

(iii) வருடாந்த அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 1,055 பயிற்சியளித்தல் செயற்பாடுகள் நடாத்தப்பட்டு ரூபா 16.4 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 816 செயற்பாடுகள் நடாத்தப்பட்டு ரூபா 13.4 மில்லியன் வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. டம் ட்ரெக்ட் (Dump Truck) சாரதி பயிற்சி மற்றும் குரோலர் ரெக்ரர் (Crawler Tractor) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையே 16 தடவையும் 12 தடவையும் நடாத்துவதற்கு பாதிடப்பட்டிருந்த போதிலும் அதில் எந்த செயற்பாடுகளும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை. விண்ணப்பதாரிகளின் குறைவின் காரணமாக வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாதிருந்ததாக தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆலோசனைப் பிரிவு

ஆண்டின் போது ஆறு கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகள் (பிரிவின் ஓட்டுமொத்த செயலாற்றல்) நடாத்தப்பட்டிருந்த போதிலும் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்கிடப்பட்ட வருமானத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகளின் இலக்கிடப்பட்ட வருமானத்தில் 36% மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தன.

## 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இயந்திர கிரய அறிக்கை (எம்சீஆர்) முறையாக நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. எனவே, கல்குளத்தில் செயற்பாட்டு பயிற்சி நிலையத்தின் (ஓரீசீ) வருமானம், கிரயம், இலாபம்/ நட்டம் மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களை கணக்காய்வின் போது இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) தேவைகள் மதிப்பிடாமல் ரூபா 4,351,000 மொத்தக் கிரயத்தில் ஒப்பந்தகாரர்களின் 2000 பெயர்ப்பட்டியல் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. தகவல்கள் காலம் கடந்த காரணத்தினால், புத்தங்களின் விற்பனை விலையைக் குறைக்கவேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2012 திசெம்பர் 31 வரை நிறுவகத்திற்கு ரூபா 534,767 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இது வரையில் காலம் கடந்து சென்ற தகவல்களை உள்ளடக்கிய 1132 புத்தகங்கள் காணப்பட்டமையினால் ரூபா 2,462,666 கிரயத்தினை அறவீடு செய்தல் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(இ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் 2012 செப்தெம்பர் 16 ஆந் திகதி வயம்ப கிரியேட்டிவ் இன்ஜினீயரிங் கொன்சோர்ட்டியம் (டபிள்யூசீஈசீ) நிறுவனத்துடன் மாகாண நிர்மாண பயிற்சியளித்தல் தேவைகளை நிறைவேற்றுதவற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையைக் (எம்ஓயூ) கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) டிப்ளோமா பாடநெறி 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்குரிய பங்கான ரூபா 143,500 தொகை பாடநெறி ஆரம்பத்தின் போது பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும் கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் குடியிருப்பு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் வயம்ப கிரியேட்டிவ் இன்ஜினீயரிங் கொன்சோர்ட்டியம் நிறுவனத்திற்கு எந்தவித விலைப்பட்டியல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையானது குடியிருப்பு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நலிவானதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) 2011 ஆம் ஆண்டின் போது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது அரசாங்க நிறுவனம் கொண்டிருக்கின்ற அதே நிபந்தனைகளை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ்பாடநெறிகளை நடாத்தியிருந்தது. அதனால் போதியளவான நலன்கள் இன்றி அப்பாடநெறிகளை நடாத்துவதற்கு தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமைக்கான காரணத்தை புரிந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) 32 மாணவர்களுக்காக ரூபா 533,333 தொகை (50,000 x 32 x 1/3 ) தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையிலிருந்து (என்ஏஜரீஏ) கிடைத்திருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் மூலம் விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

நிதிக்கூற்றுக்களில் ரூபா 194,121,235 தொகையான இருப்பு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 181,140 பெறுமதியான டயர்கள் 1997 முதல் பயனற்று களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ii) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் இருப்பு நடைமுறைச் சொத்துக்களில் 78% ஐயும் மொத்தச் சொத்துக்களில் 27% ஐயும் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இந்நிலைமை பல வருடங்களாகப் பேணப்பட்டிருந்தது. ஆகவே, நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் மூலதனம், இருப்பின் அடிப்படையில் முடக்கப்பட்டிருந்ததுடன் அது நிறுவகத்தின் நிதி நிலைமையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

(iii) நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தின் களஞ்சியம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

* 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உபயோகிக்கப்படாத இருப்புக்கள் பெருமளவு எண்ணிக்கையில் காணப்பட்டது. அதில் சில இருப்புக்கள் 1997 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

* சில இருப்புக்கள் பாவிக்க முடியாதிருந்தது. ஏனென்றால் அவற்றின் பெறுமதி கணக்காய்விற்கு கிடைக்காமையால் அந்த இருப்புக்களை மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

* உரிய இயந்திரம் மற்றும் உபகரணங்கள் இன்றி சில உதிரிப்பாகங்கள் நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தில் காணப்பட்டன.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 பெப்ரவரியில் ஆறு வருடங்களுக்காக உள்நாட்டு உணவை மேம்படுத்துவதற்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் இணக்கப்பாட்டுடன் தனியார் தரப்பினருடன் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, தனியார் தரப்பினரால் ஆண்டிற்கு 10% அதிகரிக்கும் வகையில் மாதத்திற்கு ரூபா 17,500 படி

வாடகை செலுத்தப்பட வெண்டும். இந்த வாடகையில் மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்புச் சேவை செலவினங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது. கிரய நலப் பகுப்பாய்வின் பிரகாரம், நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் தனியார் தரப்பினருக்கு அதன் வருமானத்தை விட கணிசமான செலவினங்களைச் செய்ய வேண்டியேற்பட்டிருந்ததுடன் இது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் ஆறு வருட காலப்பகுதியின் போது உடன்படிக்கை நிறுத்தப்படுமாயின் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் தனியார் தரப்பினருக்கு தற்காலிக கட்டிடத்திற்காக ரூபா 525,000 தொகை செலுத்தவேண்டியிருந்தமையானது சாதகமற்ற நிலைமையாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் கராஜ்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,232,728 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் பழுதுபார்த்தல்கள் நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தின் வேலைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் செலவினங்களைக் குறைக்க முடிந்திருக்குமென அவதானிக்கப்பட்டது.

## 3.4 முறையற்ற வெளிப்படுத்தல்கள்

கதிர்காமம், அனுராதபுரம் மற்றும் செயற்பாட்டுப் பயிற்சி நிலையம் (ஓரீசீ) , திறப்பன ஆகிய சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள காணியின் உரித்துடமை இல்லாமல் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் முறையே ரூபா 2,321,208 , ரூபா 1,360,215 மற்றும் ரூபா 16,582,992 தொகைகள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. இந்தக் காணியை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் பெயரில் கையேற்பதற்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

## 3.5 ஏனைய நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களான வெளித்தரப்பினரில் ஏழு பேருக்கு செயற்பாட்டுப் பயிற்சி நிலையத்தின் கட்டிடத்தில் காணப்படுகின்ற குளிரூட்டப்பட்ட மற்றும் குளிரூட்டப்படாத 04 அறைகள் கட்டணமின்றி வழங்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக ரூபா 3,737,532 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் செயற்பாட்டுப் பயிற்சி நிலையத்திற்கு எற்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் ஊழியர்கள் அமைச்சிற்கு அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்க முடியாதிருந்த போதிலும் உரிய அங்கீகாரமின்றி மூன்று ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும் ரூபா 1,932,704 தொகை மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்குச் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 மே மாதம் முதல் செயற்பாட்டுப் பயிற்சி நிலையத்தில் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக செயற்பாட்டுப் பயிற்சி நிலையத்தில் 26 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவர்களில் பயிற்சிகளில் நேரடியாகத் தொடர்புபடுகின்ற பயிற்சி உத்தியோகத்தர்கள், பொறியியல் உதவியாளர்கள், காட்சிப்படுத்துனர்கள் இதில் உள்ளடங்கியிருந்ததுடன் இது செயற்பாட்டுப் பயிற்சி நிலையம் வழங்குகின்ற தகைமையுடைய பாடநெறிகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தில் வெவ்வேறு துறைகளுக்குமான மனிதவளத் திட்டமிடல் மற்றும் நிருவாக வழிகாட்டல் கோவை அரசாங்க பொது முயற்சிகளிற்கும் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியான உள்ளகக் கணக்காய்வாளர், நிதிப் பணிப்பாளர் மற்றும் பிரதி செயற்பாட்டு பயிற்சி பணிப்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய 19 பதவிகளிற்கு பதில் கடமை நியமனங்கள் செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 16 நிமனங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தலைவரினால் வழங்கப்பட்டிருந்தன.

(ii) அலுவலக உதவியாளர் என்ற பெயரில் வழங்கப்பட்ட நபர் ஒருவருக்கு 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் சாரதியின் கடமை வழங்கப்பட்டிருந்தது. மேலும் வேறுஒருவர் அதே பிரிவில் அப்பதவியில் அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(iii) 2011 நவம்பர் 21 ஆந் திகதி முதல் ஐந்து அங்கத்தவர்கள் பதில் கடமை பாதுகாப்பு மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் தொடர்ந்தும் பதில் கடமை பதவிகளில் இருந்ததுடன் நிரந்தரப் பதவிகளில் பாதுகாப்பு மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் ‘‘ஆட்சேர்ப்பு நடைமுறைகள்’’ (எஸ்ஓஆர்) தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

* ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் (எஸ்ஓஆர்) நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் பிரதிப் பணிப்பாளர்களுக்குரிய குறிப்பிடப்பட்ட ‘‘வேலை விபரம்’’ காணப்படாமையினால் அவர்களால் கையாளப்பட்ட செயற்பாடுகளை மதிப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

* ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் சில பதவிகளுக்குரிய ‘‘வேலை விபரம்’’ காணப்பட்ட போதிலும் அதனை பதவியணியினர் கடமைப் பட்டியல் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் நோக்கம் அடையப்பட்டதா என கணக்காய்வில் தீர்மானிக்க முடியாதிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருப வழகாட்டியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) காணி, கட்டிடம், செயற்பாட்டு வசதிகள், மனிதவளம் போன்ற காணப்படுகின்ற வளங்கள் மற்றும் தேவையான முகாமைத்துவ உத்திகள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவகத்தின் பலமும், பலவீனமும், வெளி அச்சுறுத்தல்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் (எஸ்டபிள்யூஓரீ) என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரதான செயலாற்றல் சுட்டிகள் தீர்மானிக்கப்பட்டு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வளம், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப் பிரிவுகள் கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 16 வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது இப்பிரிவுகளின் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சில செயற்பாட்டுக் காலப்பகுதி கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்டிருந்தது. அது தவிர மேற்கூறப்பட்ட இரண்டு பிரிவுகளும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கட்டமைப்பு அட்டவணையில் இனங்காணப்பட்டிக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது நிர்மாண இயந்திர உபகரண பயிற்சி நிலையத்தினால் ஆலோசனைச் சேவை நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் கூட்டிணைந்த திட்டத்தில் நிர்மாண உபகரணங்கள், இயந்திரங்களும் பராமரித்தல்களும் மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவம் போன்ற

பிரிவுகளுக்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் அப்பிரிவின் பிரதான செயற்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றவேண்டிய நோக்குகள் மற்றும் இலக்குகள் தொடர்பாக முகாமையாளர்களின் பொறுப்புக்கள் தெளிவாக இனங்காணப்பட்டிக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் நிதிப் பிரிவிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் பணிப்பாளர் சபையினால் 2012 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பிரிவுகளிலும் பயிற்சி நிலையத்திலும் தனித்தனியாக அமுல்படுத்த வேண்டிய வருமான உழைத்தல் செயற்பாடுகள் சிலவற்றை விதந்துரைத்திருந்தது. எனினும் 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்படடிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாலை தீவு மற்றும் தெற்காசிய நாடுகளின் பயிலுனர்களுக்கு நிர்மாண உபகரண பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு வருடாந்த அமுல்படுத்தல் திட்டத்தில் (ஏஐபீ) குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வெளிநாட்டு பயிலுனர்களுக்கு கடந்த சில வருடங்களில் பயிற்சியளித்தல் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வெளிநாட்டு வாடிக்கையாளர்களைக் கவரக்கூடிய செயற்பாடுகளை எடுத்தல் மற்றும் அவ்வாறு பயிலுனர்கள் பங்குபற்றாமைக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து கவனத்தில் எடுப்பதற்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும், செலவிற்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைகளும், கட்டுபாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட எனது விபரமான அறிக்கையின் மூலம் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுபாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுதல்
(ஆ) பெறவேண்டியவைகளும் செலுத்தவேண்டியவைகளும்
(இ) பாதீடு
(ஈ) இலக்குகளிற்கு எதிரான செயலாற்றலை அளவிடுதல்
(உ) முற்பணத்தைத் தீர்த்தல்
(ஊ) பட்டியல்களை வழங்குதல்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்